பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
04 09 2024 **WEDNESDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா – ப்ருனே இடையேயான இருதரப்பு உறவுகள் மேலும் வலுப்பெறும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 7 சதவீதமாக இருக்கும் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

3. கொல்கத்தா பயிற்சி மருத்துவர் மீதான வன்முறை விவகாரத்தில் முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி தலையிட்டு, விரைவில் நீதி கிடைக்க வகை செய்ய வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு வலியுறுத்தியுள்ளார்.

4. திரிபுரா மாநிலத்தில் செயல்பட்டு வந்த இரண்டு போராட்டக் குழுவினருடன் மத்திய-மாநில அரசுகள் இன்று அமைதி உடன்பாட்டில் கையெழுத்திடவுள்ளது.

5. பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற இந்திய வீரர்களுக்கு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

இந்தியா – ப்ருனே இடையேயான இருதரப்பு உறவுகள் மேலும் வலுப்பெறும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ப்ரூனே மன்னர் **Sultan Haji Hassanal Bolkiah**-யை இன்று சந்தித்து பேசினார்.

வர்த்தகம், தொழில், பாதுகாப்பு, மருத்துவம், விண்வெளி தொழில்நுட்பம், எரிசக்தி தொடர்பான துறைகளில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தமது சமூகவலைதளப் பதிவில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவிற்கு அருகேயுள்ள கிழக்கத்திய நாடுகள் மற்றும் இந்திய-பசிபிக் கடல் எல்லையில் உள்ள நாடுகளுடன் நெருங்கிய நட்புறவை பேணவுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

ப்ருனே நாட்டின் 40வது சுதந்திர தினத்தை ஒட்டி, தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்ட அவர், இருநாடுகளுக்கு இடையயோன நட்புறவு நூற்றாண்டுகளை கடந்திருப்பதாக பெருமிதம் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 7 சதவீதமாக இருக்கும் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கும் இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்லும் என்று உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் உயரும் என்று கூறியுள்ள அந்த அறிக்கை, உலகில் நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் மத்தியில் இந்தியப் பொருளாதாரம் வலிமையானதாக இருக்கும் என்று கணித்துள்ளது.

பொது உள்கட்டமைப்பு முதலீடுகள், ரியல் எஸ்ட்டேட் துறையில், வீடு கட்டுவதற்கான முதலீடுகள், வளர்ச்சியை நோக்கிச் செல்லும் என்று குறிப்பிட்டுள்ள அறிக்கை, சர்வதேச வர்த்தகத்திலும் இந்தியாவின் நிலை உயரும் என்று எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளது.

>>>>><<<<<

மேற்குவங்க மாநில முதலமைச்சர் செல்வி. மம்தா பானர்ஜி, குழந்தைகளையும், பெண்களையும் பாதுகாக்கும் கடமையிலிருந்து தவறிவிட்டதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

கொல்கத்தா பயிற்சி மருத்துவர் மீதான வன்முறை தொடர்பாக முதலமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ள அவர், இத்தகைய குற்றங்களை விசாரிப்பதற்கு விரைவு சிறப்பு நீதிமன்றங்களை அமைக்குமாறு ஏற்கனவே 2020, 21ஆம் ஆண்டுகளில் மத்திய அரசு கடிதம் எழுதியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

போக்ஸோ வழக்குகளை விசாரிப்பதற்கு 20 நீதிமன்றங்களை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருப்பதை குறிப்பிட்டுள்ள அவர், கொல்கத்தா பெண் பயிற்சி மருத்துவர் மீதான வன்முறை தொடர்பாக, தனிப்பட்ட முறையில் தலையிட்டு, விரைவில் நீதி கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

மேற்குவங்கத்தில் பாலியல் வன்முறை தொடர்பான சர்ச்சையில் மாநில அரசு அளித்த விருதுகளை திரைப்படத்துறையினர் திருப்பி அளித்துள்ளனார்.

>>>>><<<<<

தில்லி துணை நிலை ஆளுநர் திரு. வினெய்குமார் சக்சேனாவுக்கு, அம்மாநிலத்தில் தொடர்புடைய ஆணையங்கள் மற்றும் வாரியங்களின் உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கான அனுமதியை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று வழங்கினார்.

இதன்படி, துணைநிலை ஆளுநர், ஆணைய உறுப்பினர்களையும், தலைவர்களையும் நியமனம் செய்வதற்கான அதிகாரம் பெற்றுள்ளார் என்று மத்திய உள்துறை அமைச்சகம் அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

>>>>><<<<<

திரிபுரா மாநிலத்தில் செயல்படும் இரண்டு போராட்டக் குழுக்கள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்துள்ளதை அடுத்து, அதற்கான அமைதி உடன்பாட்டை ஏற்படுத்த அம்மாநில அரசும், உள்துறை அமைச்சகமும் முடிவு செய்துள்ளன.

புதுதில்லியில் இதற்கான உடன்பாட்டில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, திரிபுரா முதலமைச்சர் திரு. மானிக் சாஹா முன்னிலையில், அம்மாநிலத்தில் செயல்பட்டு வரும் திரிபுரா தேசிய விடுதலை முன்னணி மற்றும் திரிபுரா புலிப்படை இயக்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் கையெழுத்திடவுள்ளனர்.

மத்திய உள்துறை அமைச்சகத்தின் உயரதிகாரிகளும், திரிபுரா மாநில உயரதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கின்றனர்.

வடகிழக்கு பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பாக மத்திய அரசு 12 முக்கிய உடன்பாடுகளில் கையெழுத்திட்டுள்ளது.

இதில் 3 உடன்பாடுகள் திரிபுரா மாநிலத்திற்கு தொடர்புடையதாகும்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு பதவியேற்ற பின்னர், சுமார் 10 ஆயிரம் பேர் ஆயுதங்களை ஒப்படைத்து, அமைதிவழியில் வாழ ஒப்புக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**>>>>><<<<<**

மகாராஷ்ட்ர மாநிலம் லாத்தூரில் நடைபெறும் விஷ்வசாந்தி புத்தா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு **Nanded** சென்றடைந்தார்.

அம்மாநில ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே, மத்திய அமைச்சர் திரு. ராம்தாஸ் அத்வாலே, துணை முதலமைச்சர்கள் திரு. தேவேந்திர பட்னவிஸ் மற்றும் திரு. அஜித் பவார் ஆகியோரும் அவரை விமான நிலையத்தில் வரவேற்றனர்.

உதயகிரி கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் மத்திய-மாநில அரசுகளின் நலத்திட்ட பயனாளிகளை அவர் சந்தித்து கலந்துரையாடுகிறார்.

பின்னர், அங்குள்ள குருத்வாரா விற்கும் திருமதி. திரௌபதி முர்மு செல்கிறார்.

**>>>>><<<<<**

தெலங்கானா மாநிலத்தில் பலத்த மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நிஸாமாபாத் மாவட்டத்தின் பல பகுதிகளில் 21 சென்டிமீட்டருக்கும் அதிகமாக மழை பெய்ததால், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

சில பகுதிகளில் மழை சற்று ஓய்ந்திருப்பதை அடுத்து, வெள்ளநீர் வடியத் தொடங்கியுள்ளது.

தெலங்கானாவில் 5 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பயிர்கள் சேதமடைந்துள்ளதாகவும், பாதிக்கப்பட்ட சாலைகள் மற்றும் ரயில் பாதைகளில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் எமது செய்தியாளர் கூறுகிறார்.

கனமழையால் 16 பேர் உயிரிழந்திருப்பதாகவும், அவர்களது குடும்பங்களுக்கு தலா 5 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அம்மாநில அரசு கூறியுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பயிர்களுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் தெலங்கானா அரசு தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

நாகாலாந்தில் பெய்து வரும் கனமழை காரணமாக, தீமாபூரில் வர்த்தக மையம் ஒன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகவும், பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதால், போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கோஹிமாவின் துணை ஆணையர் திரு. **Polan John** தெரிவித்துள்ளார்.

கனமழை காரணமாக, இதுவரை 4 பேர் உயிரிழந்திருப்பதாகவும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை மீட்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

>>>>><<<<<

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதை அடுத்து, நாட்டின் பல பகுதிகளில் மழை பெய்யும் வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, குஜராத், கொங்கன் மற்றும் கோவா பகுதிகள் உள்ளிட்ட நான்கு மாநிலங்களின் பல பகுதிகளில் கன முதல் அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட தமிழ்நாடு, ராயலசீமா மற்றும் அதனையொட்டியுள்ள கர்நாடக மாநிலத்தின் சில பகுதிகள், தெலங்கானா உள்ளிட்ட மூன்று மாநிலங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் உத்ராகண்ட் மற்றும் பீகாரின் பல பகுதிகளில் இன்று அதிகனமழை பெய்யும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆந்திரப்பிரதேச மாநிலம், விஜயவாடா மற்றும் குண்டூரில் இன்று அதிகாலை கனமழை பெய்ததை அடுத்து, வெள்ளம் பாதித்த பகுதிகளில் நடைபெறும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது.

விஜயவாடாவில் உள்ள புத்தமேரு கால்வாய் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதை அடுத்து, உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதில் மோட்டார் படகுகள் மற்றும் ட்ரோன்கள் பயன்படுத்தப்படுவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

>>>>><<<<<

உத்தரபிரதேச மாநிலத்தின் **Tarai** வனப்பகுதிகளின் அருகே ஓநாய்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும், குழந்தைகளையும், பெண்களையும் தாக்கி வருவதாகவும் எழுந்த புகாரை அடுத்து, அவைகளை கண்டதும் சுடுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, பிலிப்பிட் மாவட்டத்தில் நடத்திய ஆய்வுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. அருண் சக்சேனா, ஓநாய்களின் நடமாட்டத்தை கண்காணிப்பதற்கு சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும், ட்ரோன்கள் மூலம் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார்.

லக்கிம்பூர் மற்றும் பிற பகுதிகளிலும் இதுதொடர்பான தேடுதல் வேட்டை நடைபெற்று வருவதாகவும், 20 குழுக்கள் ஓநாய்களை பிடிக்கும் பணியை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மொத்தம் 6 ஓநாய்கள் நடமாடுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் வேட்டையில் 4 ஓநாய்கள் பிடிப்பட்டுள்ளன.

>>>>><<<<<

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இன்று நடைபெறும் மகளிர் டேபிள் டென்னிஸ் பிரிவு ஆட்டத்தில் பாவினா பட்டேலும், ஆடவர் சைக்கிளிங் பிரிவில் **Arshad Shaik-**ம், மகளிர் பிரிவில் **Jyoti Gaderiya-**வும் பங்கேற்கின்றனர்.

ஆண்கள் தடகள பிரிவில் **Mohammed Yaser, Rohit Kumar, Sachin Sarje Rao-**வும் மகளிர் பிரிவில் **Amisha Rawat, Simran** ஆகியோரும் இன்று பங்கேற்கின்றனர்.

இப்போட்டியில் தங்கம் மற்றும் வெள்ளிப்பதக்கங்களை வென்ற **Ajit Singh Sunder Singh Gurjar, Saratkumar, Mariappan Thangavelu** ஆகியோருக்கு குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

வெற்றி பெற்றவர்கள் இளம் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிப்பதாக அவர்கள் கூறியுள்ளனர்.

அவர்களின் மனஉறுதியும் விடாமுயற்சியும் மேலும் பல வெற்றிகளை அளிக்கும் என்று எதிர்பார்ப்பதாக தலைவர்கள் வாழ்த்தியுள்ளனர்.

**>>>>>END<<<<<**